ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| | | |
|---|---|---|
| வரலாறு II (பகுதி I)<br>History II (Part I) | 25-C T II | மூன்று மணித்தியாலம்<br>Three hours |

நவீன உலக வரலாறு - கி.பி. 1500 - 1989 வரை

சுட்டெண்: ..................................

**அறிவுறுத்தல்கள்:**
* இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒரு வினாவுக்கு உரிய சரியான விடையைத் தெரிவு செய்து பின், அதனை இப்பத்திரத்திலே **அறிவுறுத்தல்களுக்கமையக் குறிப்பிடுக.**
* இப்பகுதியிற்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது **பகுதி I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் **பகுதி II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

● **1 - 10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**1.** (1) மத்திய தரை (2) அத்திலாந்திக் (3) அத்திரியாற்றிக் (4) கஸ்பியன் (5) போல்டிக் (.........)

**2.** (1) பிரெஸ்டர் ஜோன் (2) ஜோன் வைக்கிளிஃப் (3) ஜோன் ஹஸ் (4) மார்ட்டின் லூதர் (5) உல்ரிச் ஸ்விங்கிளி (.........)

**3.** (1) ஐந்தாம் நிக்கொலஸ் (2) ஆறாம் அலெக்ஸாந்தர் (3) இரண்டாம் யூலியஸ் (4) பத்தாம் லியோ (5) ஐந்தாம் சார்ள்ஸ் (.........)

**4.** (1) அங்கோலா (2) மெக்ஸிகோ (3) பெரு (4) ஆர்ஜென்ரீனா (5) வெனெசுவெலா (.........)

**5.** (1) கார்ட்டியர் (2) அல்பர்க்கேர்க் (3) யோலியட் (4) ல சால் (5) மார்க்குவே (.........)

**6.** (1) பாபர் (2) ஹுமாயூன் (3) அக்பர் (4) ஜஹங்கீர் (5) நூர்ஜஹான் (.........)

**7.** (1) ரொபேர்ட் கிளைவ் (2) டுப்ளே (3) வெலெஸ்லீ (4) வொரன் ஹேஸ்டிங்ஸ் (5) வில்லியம் பென்றிங் (.........)

**8.** (1) ரௌன்ஸ்ஷென்ட் (2) ஜோர்ஜ் வாஷிங்டன் (3) ஜெஃபேர்சன் (4) ஜேம்ஸ் அடம்ஸ் (5) ஹமில்டன் (.........)

**9.** (1) ஜவர்ஹர்லால் நேரு (2) வல்லபாய் பட்டேல் (3) லால் பகதூர் சாஸ்திரி (4) இந்திரா காந்தி (5) மொரார்ஜி தேசாய் (.........)

**10.** (1) சர்வதேச தொழிலாளர் சங்கம் (ILO)
(2) வட அத்திலாந்திக் உடன்படிக்கை நிறுவனம் (NATO)
(3) வோர்ஸோ உடன்படிக்கை (WARSAW)
(4) தென்கிழக்காசிய உடன்படிக்கை நிறுவனம் (SEATO)
(5) மத்திய உடன்படிக்கை நிறுவனம் (CENTO) (.........)

[பக். 2 ஐப் பார்க்க

- **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒரு** சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) நைல் - ஆபிரிக்கா
(2) டனியூப் - ஐரோப்பா
(3) ஐராவதி - இந்தியா
(4) அமேசன் - தென் அமெரிக்கா
(5) மிசிசிப்பி - வட அமெரிக்கா (.........)

**12.** (1) வார்தொலமியூ டயஸ் - ஆபிரிக்காவின் தென்முனைக்குக் கடல் வழியாகச் சென்றமை
(2) கிறிஸ்தோபர் கொலம்பஸ் - கரீபியன் தீவுகளை அடைந்தமை
(3) வாஸ்கோடகாமா - ஆசியாவிற்கான முழுமையான கடல்வழிப் பாதையைக் கண்டு பிடித்தமை
(4) பீத்றோ அல்வாரேஸ் கப்ரால் - புதிய உலகத்தைக் கண்டு பிடித்தமை
(5) வாஸ்கோத பல்போவா - பசுபிக் கடலைக் கண்டு பிடித்தமை (.........)

**13.** (1) கிறிஸ்தவ சமய அடிப்படைகள் (Institutes) - ஜோன் கல்வின்
(2) லெபியதன் (Leviathan) - தோமஸ் ஹொப்ஸ்
(3) சட்டங்களின் உண்மையான இயல்புகள் (Spirit of the Laws) - ஜோன் யேக்ஸ் ரூசோ
(4) தேசங்களின் செல்வம் (Wealth of Nations) - அடம் ஸ்மித்
(5) மனிதனின் உரிமைகள் (Rights of Man) - தோமஸ் பெய்ன் (.........)

More Past Papers at
tamilguru.lk

**14.** (1) பதினான்காம் லூயி - "நானே அரசு"
(2) நெப்போலியன் போனபார்ட் - "நானே புரட்சி"
(3) ஒற்றோ வொன் பிஸ்மார்க் - "இக்காலத்துப் பிரதான பிரச்சினைகள் பேச்சுக்களினாலும் பெரும்பான்மை வாக்குகளினாலும் அன்றி போரினாலும் படைக்கலங்களினாலும் தீர்க்கப்படும்."
(4) மகாத்மா காந்தி - "ஹரிசனங்கள் கடவுளின் பிள்ளைகளாவர்."
(5) பிடல் காஸ்ற்றோ - முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் (.........)

**15.** (1) முகம்மது அலி ஜின்னா - பாகிஸ்தான்
(2) யூ நு - பர்மா
(3) ரமோன் மக்சேசே - பிலிப்பீன்ஸ்
(4) லீ குவான் யூ - வியட்னாம்
(5) அப்துல் நாசர் - எகிப்து (.........)

- **16 - 25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**16.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | பீஜிங் | A | தாய்லாந்து |
| (ii) | ரங்கூன் | B | பாகிஸ்தான் |
| (iii) | பாங்கொக் | C | பிலிப்பீன்ஸ் |
| (iv) | மணிலா | D | சீனா |
| (v) | இஸ்லாமாபாத் | E | பர்மா |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**17.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ஓகஸ்பேர்க் உடன்படிக்கை | A | நியாயபூர்வ உரிமைகள் கோட்பாடு |
| (ii) | நான்ற் பிரகடனம் | B | பாதுகாப்பையும் சர்வதேச சமாதானத்தையும் பேணுதல் |
| (iii) | வியன்னா மகாநாடு | C | தேசிய சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு |
| (iv) | வேர்ஸேயில் உடன்படிக்கை | D | பிரெஞ்சு சீர்திருத்தவாதக் கிறிஸ்தவர்களுக்கு சமய சுதந்திரம் வழங்கியமை |
| (v) | ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் | E | 'அரசன் எவனோ அவனுடைய சமயம்' |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

[பக். 3 ஐப் பார்க்க

**18.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | பேர்பன் | A | ஜப்பான் |
| (ii) | ஒறேன்ஜ் | B | பிரான்ஸ் |
| (iii) | தொக்குகாவா | C | சீனா |
| (iv) | மஞ்சு | D | வியட்னாம் |
| (v) | நுகுவென் | E | நெதர்லாந்து |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**19.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | ஒளி மயமான புரட்சி | A | மனித உரிமைகள் பிரகடனம் |
| (ii) | அமெரிக்கப் புரட்சி | B | மனித உரிமைகள் சர்வதேசப் பிரகடனம் |
| (iii) | பிரெஞ்சுப் புரட்சி | C | தொழிலாளர் வர்க்கத்துச் சர்வாதிகாரம் |
| (iv) | பொல்ஷெவிக் புரட்சி | D | உரிமைகள் மசோதா |
| (v) | ஐக்கிய நாடுகள் சபை | E | சுதந்திரப் பிரகடனம் |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**20.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | ராம் மோகன் ரோய் | A | இந்திய சுயாட்சிக் கழகம் |
| (ii) | தயானந்த சரஸ்வதி | B | சுவராஜ் கட்சி |
| (iii) | அனி பெஸன்ற் | C | ராமகிருஷ்ணா மிஷன் |
| (iv) | சுவாமி விவேகானந்தர் | D | ஆர்ய சமாஜம் |
| (v) | மோதிலால் நேரு | E | பிரம்ம சமாஜம் |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**21.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | லியோன் ரொல்ஸ்ரோய் | A | கீதாஞ்சலி |
| (ii) | விக்ரர் ஹியூகோ | B | போரும் சமாதானமும் (War and Peace) |
| (iii) | ரவீந்திரநாத் தாகூர் | C | கிழ மனிதனும் கடலும் (Old Man and the Sea) |
| (iv) | ஏர்னஸ் ஹெமிங்வே | D | கொக்கேசியர் சுண்ணாம்பு வட்டம் (Caucasian Chalk Circle) |
| (v) | பேர்த்கோல்ட் பிரெக்ட் | E | ஏழைபடும் பாடு (Les Miserables) |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**22.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | அல்ஜீரியா | A | பிரித்தானியர் |
| (ii) | லிபியா | B | பெல்ஜியர் |
| (iii) | நைஜீரியா | C | போர்த்துக்கேயர் |
| (iv) | மொசாம்பிக் | D | பிரான்ஸியர் |
| (v) | கொங்கோ | E | இத்தாலியர் |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**23.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | V.I. லெனின் | A | மேலைத்தேசங்களோடு சமாதான வாழ்வு |
| (ii) | லியோன் ரொட்ஸ்கி | B | கிளசனோஸ்ட்டும் (வெளிப்படைத்தன்மை) பெறஸ்ரொய்காவும் (பொருளாதார புனர்நிர்மாணம்) |
| (iii) | ஜோஸெ.்.ப் ஸ்டாலின் | C | ஒரு தேசத்திற் சோசலிஷம் |
| (iv) | நிகிதா குருஷ்ஷேவ் | D | புதிய பொருளாதாரக் கொள்கை |
| (v) | மிகையில் கொர்ப்பசேர்வ் | E | நிரந்தரப் புரட்சி |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**24.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | சீயம் | A | ஈராக் |
| (ii) | பாரசீகம் | B | தாய்லாந்து |
| (iii) | மெசபொத்தேமியா | C | தைவான் |
| (iv) | போர்மோசா | D | மியன்மார் |
| (v) | பர்மா | E | ஈரான் |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

[பக். 4 ஐப் பார்க்க

**25.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | கானா | A | யூலியஸ் நைர்ரேரி |
| (ii) | கென்யா | B | கெனத் கௌண்டா |
| (iii) | தன்சேனியா | C | குவாமே நிக்ருமா |
| (iv) | சாம்பியா | D | ஹேஸ்டிங் பண்டா |
| (v) | மலாவி | E | யோமோ கென்யாடா |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

- **26 - 30** வரையுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிந்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**26. ஸ்பானியாவின் ஆதரவில் உலகத்தை கடல் வழியாக முதன்முதலாகச் சுற்றிவந்தவர் என்று கருதப்படுபவர் யார்?**
(1) கப்பலோட்டியான ஹென்றி (2) ஜோன் கபோற்
(3) அமெரிகோ வெஸ்புக்ஸி (4) பேர்டினன்ட் மகலன்
(5) ஹென்றி ஹட்சன் (.........)

**27. ஜேசு சபையினை நிறுவியவர் யார்?**
(1) இராஸ்மஸ் (2) மார்ட்டின் லூதர்
(3) உல்ரிச் ஸ்விங்கிளி (4) ஜோர்ஜ் கல்வின்
(5) இக்னேசியஸ் லொயோலா (.........)

**28. ஈர்ப்புக் கோட்பாட்டை விளக்கியவர் யார்?**
(1) ஐசக் நியூட்டன் (2) சார்ள்ஸ் டார்வின்
(3) சிக்மன்ட் ஃப்ரொயிட் (4) அல்பேர்ட் ஐன்ஸ்டீன்
(5) ஆர்னல்ட் ற்ரொயின்பீ (.........)

**29. பங்களாதேசின் முதலாவது பிரதம மந்திரி யார்?**
(1) சுல்பிகார் அலி பூட்டோ (2) ஷேக் முஜிபுர் ரஹ்மான்
(3) சியாவூர் ரஹ்மான் (4) ஷேக் முகம்மத் அப்துல்லா
(5) ஹுசைன் முகம்மது இர்ஷாத் (.........)

**30. பிரித்தானியாவின் முதலாவது பெண் பிரதமர் யார்?**
(1) றோசா லக்சம்பேர்க் (2) ஓல்டா மேயர்
(3) மார்க்கரட் தச்சர் (4) மடலீன் அல்விறிக்ற்
(5) அஞ்சலா மேர்க்கெல் (.........)

- **31 - 35** வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் .................. **1** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **2** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் .................. **3** எனவும்
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **4** எனவும்

ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின் ... **5** எனவும் **அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**31. மேல்வருவனவற்றுள் பிரதிச் சீர்திருத்தவாதத்தின் அம்சங்கள் எவை?**
(A) லூதரை கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து வெளியேற்றிய பாப்பரசரின் கட்டளை
(B) ற்றென்ற் மகாநாடு
(C) எதிர் சமயவாதிகளுக்குத் தண்டனை வழங்குதல்
(D) வெஸ்ட்பேலியா உடன்படிக்கை (.........)

[பக். 5 ஐப் பார்க்க

**32.** ஒல்லாந்தரின் கீழைத்தேய பேரரசு தொடர்பான கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) கீழைத்தேய சாம்ராஜ்யத்திற்கு அத்திவாரமிட்டவர்களில் ஒருவராக யான் பீட்டர்சூன் கூன் கருதப்படுகிறார்.

(B) ஒல்லாந்தரின் கீழைத்தேய சாம்ராஜ்யத்தின் தலைமை நிர்வாக நிலையம் பற்றேரியாவில் அமைக்கப்பட்டது.

(C) ஒல்லாந்தர் 1571 இல் பிலிப்பீன்ஸைக் கைப்பற்றினார்கள்.

(D) பிரித்தானியர் ஒல்லாந்தரை ஜாவாவிலிருந்து 1796 ஆம் ஆண்டு வெளியேற்றினார்கள். (.........)

**33.** மேல்வருவோருள் இந்தோனேசியாவின் ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் யாவர்?

(A) சுகார்னோ (B) சுகர்த்தோ

(C) துங்கு அப்துல் ரகுமான் (D) மகதிர் முகம்மது (.........)

**34.** மேல்வருவோருள் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் சான்சலர்களாக இருந்தவர்கள் யாவர்?

(A) ரிக்வே லீ (B) டாக் ஹமர்ஸ்ஜோல்ட்

(C) கொன்ராட் அடினோர் (D) விலி பிராண்ட் (.........)

**35.** பனிப்போர் தொடர்பாக மேல்வரும் குறிப்புகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் என்பன தலைமை தாங்கிய நாடுகளின் அணிகளுக்கிடையிலான அரசியல்வாத (Ideological), அரசியல், ராஜதந்திர மோதல்களே காரணமானவை.

(B) வட அத்திலாந்திக் உடன்படிக்கை நிறுவனம் 1949 இல் உருவாக்கப்பட்டது.

(C) சோவியத் யூனியனுக்கும் அதன் கீழ்ப்படிவான அரசுகளுக்குமிடையில் வோர்ஸோ உடன்படிக்கை 1955 இல் கைச்சாத்திடப்பட்டது.

(D) மிகையில் கொர்ப்பச்சேர்வ் அதிகாரம் பெற்றதும் பனிப்போர் நெகிழ்ச்சியடையத் தொடங்கியது. (.........)

- **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதும் **முதலாம்** கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | ஒல்லாந்தர் கிழக்கிந்தியக் கம்பனி 1602 இல் அமைக்கப்பட்டது. | 1842 இல் ஓபியம் போரின் முடிவிற் பிரித்தானியர் பர்மாவினைக் கைப்பற்றினார்கள். | (.........) |
| **37.** | 1649 இல் பராளுமன்றத்தின் கட்டளைப்படி முதலாம் சார்ள்ஸ் மன்னர் கொலை செய்யப்பட்டார். | 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகளுக்கு, ஒளிமயமான புரட்சி உந்து சக்தியாக விளங்கியது. | (.........) |
| **38.** | 1857 ஆம் ஆண்டுக் கலகம் பிரித்தானிய இந்திய வரலாற்றில் ஒரு நிலைமாறு கட்டமாக அமைந்தது. | 1857 ஆம் ஆண்டுக் கலகத்தின் பின்பு இங்கிலாந்து கிழக்கிந்தியக் கம்பனியின் ஆட்சி ஒழிக்கப்பட்டு பிரித்தானிய அரசின் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டது. | (.........) |
| **39.** | ரஷ்யப் புரட்சியின் காலத்தில் ரஷ்யாவின் த்ஸார் மன்னராகிய பதினாறாம் லூயி கொலை செய்யப்பட்டார். | அலெக்ஸாந்தர் கெரென்ஸ்கி ரஷ்யப்புரட்சியின் பிரதான தலைவர்களில் ஒருவராவார். | (.........) |
| **40.** | மஞ்சூர்யா மீதான ஜப்பானின் படையெடுப்பை சர்வதேச சங்கத்தினால் தடைசெய்ய முடிந்தது. | ஹிரோஷிமா, நாகசாக்கி ஆகியவற்றின் மீது அணுகுண்டுகள் போடப்பட்டமையின் விளைவாக ஜப்பான் சரணடைந்ததோடு இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தது. | (.........) |

* *

[பக். 6 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

**25-C T II**

## நவீன உலக வரலாறு - கி.பி. 1500 - 1989 வரை

**அறிவுறுத்தல்கள்:**

※ **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **உலகப் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

### பகுதி II

**1.** உமக்குத் தரப்பட்ட வரைபடத்தில் மேலே குறிப்பிட்டுள்ள **இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப்** பெயரிட்டு, அவற்றுள் **எவையேனும் இரண்டினைப்** பற்றிச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

(i) மத்தியதரைக் கடல் (ii) அந்தீஸ் மலைகள் (iii) குவாங் - கோ நதி (iv) மடகஸ்கார்
(v) சுயஸ் கால்வாய் (vi) கல்கத்தா (vii) ஈராக் (viii) நோர்வே

*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் **05** புள்ளிகள்)*

**2.** "மறுமலர்ச்சியோடு நவீனகாலம் உதயமாகின்றது"

(i) மறுமலர்ச்சி தொடங்கிய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ii) மறுமலர்ச்சிக் காலத்துக் கலைஞர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iiii) 'மறுமலர்ச்சி' எதனைக் குறிக்கும் என்பதை விளக்குக. *(03 புள்ளிகள்)*

(iv) மறுமலர்ச்சியுடன் எவ்வாறு ஐரோப்பாவின் நவீனகாலம் தொடங்கியது என்பதனைப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

**3.** (i) ஐரோப்பாவிலே முதன் முதலாக இங்கிலாந்திற் கைத்தொழிற் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை? *(06 புள்ளிகள்)*

(ii) கைத்தொழிற் புரட்சியின் உடனடியான விளைவுகளையும் நீண்டகாலமாக ஏற்பட்ட விளைவுகளையும் ஆராய்க. *(08 புள்ளிகள்)*

**4.** "நவீனகால ஐரோப்பாவை உருவாக்குவதில் பிரெஞ்சுப் புரட்சி ஒரு தீர்க்கமான காலமாகும்."

(i) 1789 ஆம் ஆண்டு யூலை 14 ஆம் திகதி பிரான்சில் நடைபெற்ற பிரபலமான நிகழ்ச்சியைப் பெயரிடுக. *(01 புள்ளி)*

(ii) பிரெஞ்சுப் புரட்சியின் தலைவர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) பிரெஞ்சுப் புரட்சியின் பிரதான கட்டங்களைச் சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iv) நவீனகால ஐரோப்பிய வரலாற்றைப் பிரெஞ்சுப் புரட்சி எவ்வாறு செல்வாக்குப்படுத்தியுள்ளது என்பதை ஆராய்க. *(07 புள்ளிகள்)*

**5.** முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்கு நவ ஏகாதிபத்தியம் எந்தளவிற்குக் காரணமாய் இருந்தது? *(14 புள்ளிகள்)*

**6.** இந்திய தேசிய இயக்கத்தில் மகாத்மா காந்தி கொண்டிருந்த பங்கினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**7.** வியட்னாமின் தேசிய இயக்கத்திலுள்ள பிரதான கட்டங்களை விளக்குக. *(14 புள்ளிகள்)*

**8.** "சீனாவிலே பொதுவுடமைக்கட்சி வெற்றியடைந்தமை அந்நாடு நவீனமயமாகி அபிவிருத்தி அடைந்தமையின் முதலாவது கட்டமாகும்."

(i) சீனாவிற் புரட்சி ஏற்பட்ட காலத்தில் கூமின்ராங் தலைவரின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ii) 1949 ஆம் ஆண்டில் புரட்சிக்குத் தலைமை தாங்கிய சீன கொம்மியூனிஸக் கட்சியின் தலைவரின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

[பக். 7 ஐப் பார்க்க

(iii) சீனப் புரட்சியின் பின்னணியைச் சுருக்கமாக ஆராய்க. *(05 புள்ளிகள்)*

(iv) புரட்சியின் பின் சீனாவை அபிவிருத்தி செய்வதற்குப் பொதுவுடமைக் கட்சியினர் கடைப்பிடித்த வழிகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(07 புள்ளிகள்)*

**9.** **(A)** பகுதிக்கு **அல்லது** **(B)** பகுதிக்கு மட்டும் விடை எழுதுக.

**(A)** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

(i) ஸ்பானியாவின் காலனித்துவப் பேரரசு

(ii) வியன்னா மகாநாடு

(iii) மைஜீ வம்சத்தின் புனருத்தாரணம்

(iv) ஜேர்மனியில் நாட்சிசம்

(v) ஜோசெ.ஃப் ஸ்டாலினின் தலைமையில் சோவியற் ஒன்றியம்

(vi) ஐக்கிய நாடுகள் சபை *(ஒவ்வொரு சிறுகுறிப்புக்கும் 07 புள்ளிகள் வீதம்)*

**(B)** கியூபா புரட்சியில் பிடெல் காஸ்ரோ கொண்டிருந்த பங்கினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

* * *

More Past Papers at
tamilguru.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| | | | |
|---|---|---|---|
| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 25-C | T | |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................

